குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சிசி.எண். 137/2018

அ.சா.5

2025–ம் ஆண்டு மார்ச் 21ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 05 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| தந்தை பெயர் | பச்சமுத்து | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.12 மணி,

Accused Mani Present. Advocate Mr. Veeramani Present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று மேட்டூரில் வசித்து வருகிறேன். கடந்த 25.08.2015 ம் தேதி தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 06.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த போது சாட்சி அலமேலு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் பேரில் நிலைய குற்ற எண் 477/2015 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ– 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. புகாரிரை யார் எழுதினார் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது என்றால் சரி. அ.சா.1 சம்பவத்தை கேள்விபட்டு புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இவ்வழக்கில் நான் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்யவில்லை என்றால்

சரி. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றைய தினம் காலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அப்போது என்ன நேரம் என்று எனக்கு தெரியவில்லை.

3. இவ்வழக்கு விபத்தின் போது எதிரி வாகனத்தை ஓட்டிச் செல்லவில்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் தான் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கு விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.18 மணி**

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.